# உங்கள் எதிர்பார்ப்புகள்

## நிறைவேறும் என்ற நம்பிக்கை உள்ளதா?



**நா**ம் அனைவரும் ஒன்றிணைந்து வந்து எதிர்பார்ப்புகளை முன்வைத்து அது நிறைவேறினால் என்ன செய்வது?

உங்களின் கிறிஸ்துமஸ் - புத்தாண்டு எதிர்பார்ப்புகளை ஜிளம் கிள்ளான் பூர்த்திசெய்யும். எனவே Wish & Win எனும் போட்டியைத் தவறவிடாதீர். Gogo Merry Klangites GM Klang 2021 ஏற்று நடத்தப்படும் இந்தப் போட்டி வரும் ஜனவரி 2ஆம் தேதியோடு முடிவடைகிறது.

எனவே உங்கள் சமூக வலைத்தளங்களில் என்ன பரிசு வேண்டும் என்பதை (உதாரணத்திற்கு விளையாட்டுப் பொருட்கள், உடைகள், திரைச்சீலை, கம்பளம்) பதிவுசெய்து ஜிளம் கிள்ளான் தரப்பிடம் எதிர்பார்ப்புகளை முன்வையுங்கள். உங்களுள் 12 அதிர்ஷ்டசாலிகளை ஜிளம் கிள்ளான் தரப்பு தேர்வுசெய்து முன்வைத்த எதிர்பார்ப்புகளை நிஜமாக்கும்.

***இந்தப் போட்டியில் பங்குபெறுவதற்கான எளிய வழிமுறைகள்:***

1. ஜிளம் கிள்ளானின் புளோக் B, 4ஆவது மாடியில் வைக்கப்பட்டிருக்கும் 12 பலூன் அலங்கரிப்பு இடத்திற்கு அல்லது புளோக் பியில் கீழ் மாடியில் இருக்கும் ஒரு பலூன் அலங்கரிப்பு இடத்திற்குச் சென்று அந்த பலூன் அலங்கரிப்புகளுடன் புகைப்படம் எடுத்துக்கொள்ளுங்கள்.
2. இந்தப் புகைப்படத்தை உங்கள் சமூகவலைத்தளப் பக்கத்தில் பதிவேற்றம் செய்து என்ன பரிசு வேண்டும் என்பதைத் தெரியப்படுத்தி, அதற்கான காரணத்தையும் விளக்குங்கள். குறிப்பாக #GogoMerryKlangites2021 என்ற குறியீட்டையும் உடன் பதிவேற்றம் செய்யுங்கள்.

இந்தப் போட்டி 2022 ஜனவரி 2ஆம் தேதி முடிவடையும்.






உங்கள் ஆண்டு இறுதியை மலேசியாவின் மிகப்பெரிய மொத்த விற்பனை மையமான ஜிளம் கிள்ளானில் நிறைவுசெய்யுங்கள். இங்குள்ள கிறிஸ்துமஸ் பண்டிகைச் சூழலை உணர்வதோடு பலதரப்பட்ட பொருட்களை வாங்குவதன் வழி ஆண்டு இறுதியை மகிழ்ச்சியுடன் கழிப்பீர். அனைத்துப் பொருட் களையும் ஒரே இடத்தில் வாங்குவதற்கு ஜிளம் கிள்ளான் வழியமைத்துத் தருகிறது.

கூடுதலாக ஜிளம் கிள்ளான் தரப்பும் மகிழ்ச்சியை ஏற்படுத்தக்கூடிய பல நடவடிக்கைகளை ஒருங்கிணைத்துள்ளது. குறிப்பாக கிறிஸ்துமஸ் கொண்டாட்டங்கள், ஜினா - மெட் மாஸ்கோட் சந்திப்பு, கண்கவர் பலூன் வழங்குதல் மேலும் கிறிஸ்துமஸ் - புத்தாண்டைக் கொண்டாடுவதற்கான இன்னும் பல ஆக்கப்பூர்வமான நிகழ்ச்சிகள் நடைபெறுகின்றன.

இது குறித்த இன்னும் பல சுவாரஸ்ய தகவல் களை அதிகாரப்பூர்வ ஃபேஸ்புக் - இண்ஸ்டாகிராம் சமூக வலைத்தளப் பக்கங்களில் கண்டறிவதோடு www.gmklang.com என்ற அகப்பக்கத்தையும் வலம் வாருங்கள்.

---

*ஈப்போ கல்லுமலை ஆலய தைப்பூசத் திருவிழா*

# நிபந்தனைகளுக்கு உட்பட்டு நடைபெறும்

***துணைத் தலைவர் சுப்பிரமணியம் அறிவிப்பு***

● **ஆர். கிருஷ்ணன்**

ஈப்போ, டிச. 31-

ஈப்போ இந்து தேவஸ்தான பரிபாலன சபாவின் 113ஆவது கல்லுமலை ஆலய தைப்பூசத்திருவிழா அரசாங்கம் விதித்துள்ள விதிமுறைகளுக்கு உட்பட்டு நடைபெறும் என ஈப்போ இந்து தேவஸ்தான பரிபாலன சபாவின் துணைத் தலைவர் இரா. சுப்பிரமணியம் என்ற ஜெயமணி கூறினார்.

தைப்பூசத் திருவிழா 2022 ஜனவரி 18ஆம் தேதி நடைபெறவுள்ளது. 2021ஆம் ஆண்டில் கோவிட்-19 பெருந்தொற்று அச்சுறுத்தல் காரணமாக தைப்பூச திருவிழாவினை நடத்த முடியாமல் போனது. ஆனால், இம்முறை தைப்பூச திருவிழாவினை சிறப்பாக நடத்த ஈப்போ இந்து தேவஸ்தான பரிபாலன சபா ஆயத்தமாகி வருவதாக அவர் கூறினார்.

இந்த தைப்பூசத்திருவிழா மிகவும் சிறப்பாக நடைபெற வேண்டும் என ஈப்போ இந்து தேவஸ்தான பரிபாலன சபாவின் செயலவை வாயிலாக எடுத்த முயற்சியின் விளைவாக அரசாங்கம் வெளியிட்ட எஸ்.ஓ.பி. என்னும் நிபந்தனைகள் கிடைக்கப்பெற்றது. அதில் குறிப்பிட்ட சில விஷயங்கள் ஈப்போ மக்களுக்கும் இரு ஆலயங்களுக்கும் ஒத்துவராத காரணத்தினால் அந்த நிபந்தனைகளை மறுபரிசீலனை செய்யுமாறு விண்ணப்பம் செய்துள்ளதாக அவர் தெரிவித்தார்.



அதுமட்டுமன்றி, ஒற்றுமைத்துறை அமைச்சர் டத்தோ ஹலிமா சாடிக் எதிர்வரும் 3.1.2022 (திங்கட்கிழமை) காலை 11 மணிக்கு ஈப்போ இந்து தேவஸ்தானத்தின், புந்தோங் ஸ்ரீமகா மாரியம்மன் ஆலயத்திற்கு நேரடியாக வருகை மேற்கொண்டு பேச்சு நடத்தவிருக்கிறார். இந்த விணணப்பங்கள் யாவும் அமைச்சருடன் இணைந்து பரிசீலிக்கப்பட்டு, அடுத்த வாரத்திற்குள் இதற்கான இறுதி வடிவம் கொடுக்கப்படும் என அவர் தெரிவித்தார்.

அவர்கள் வழங்கிய நிபந்தனைகளில் 10 பெரிய காவடிகளும் 20 சிறிய காவடிகளுக்கு மட்டுமே அனுமதி வழங்கப்படுகிறது. அங்கப்பிரதட்சணைக்கும் காது குத்தலுக்கும் அவர்கள் அங்கீகாரம் வழங்கவில்லை. பால்குடத்திற்கு ஒரு வேளையில் 50 பேருக்கு மட்டுமே அனுமதி வழங்கப்படுகிறது. முடிகாணிக்கைக்கும் சில கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டுள்ளன. விதிமுறைகள் இவ்வாறு இருக்க இதனை மறுபரிசீலனை செய்ய வேண்டும் என ஈப்போ இந்து தேவஸ்தானம் சார்பாக கேட்டுக்கொண்டுள்ளோம் எனவும் சுப்பிரமணியம் தெரிவித்தார்.

அத்துடன் அரசாங்கம் நமக்கு தைப்பூசம் மற்றும் தேரோட்டத்தை நடத்த அனுமதி அளித்துள்ளனர். தேரோட்டம் ஜனவரி 16ஆம் தேதி இரவு 8 மணிக்கு தொடங்குவதற்கு திட்டமிட்டுள்ளோம். 10 இடங்களில் மட்டுமே தேர் நிறுத்த அனுமதி வழங்கியுள்ளனர்.

நாங்கள் அந்த 10 இடத்தையும் தேர்வு செய்து அவர்களுக்கு அனுப்பியுள்ளோம். இந்தத் தேரோட்டத்தில் முறையாக பதிவு செய்யப்பட்ட 500 பேர் மட்டுமே கலந்து கொள்ள முடியும். எண்ணிக்கையை 1,000 பேராக உயர்த்தவும் கேட்டுள்ளோம் என்று அவர் கூறினார்.

இம்முறை ஈப்போ கல்லுமலை ஆலய தைப்பூச திருவிழாவில் காது குத்துதல் மற்றும் அங்கப்பிரதட்சணைக்கு மட்டுமே அனுமதி கிடையாது.

தேரோட்டத்தில் கலந்துகொள்ளவிருக்கும் பக்தர்கள் முறைப்படி புந்தோங் ஸ்ரீ மகாமாரியம்மன் ஆலயத்தில் கண்டிப்பாக 2 ரிங்கிட் கட்டணம் செலுத்தி ரசீது பெறுவது அவசியமாகும். அத்துடன், பால்குடம் எடுக்கும் அன்பர்களும் கூகுள் இயங்கலை வாயிலாக பதிவு செய்வது சிறப்பாகும். ஈப்போ இந்து தேவஸ்தானம் ஆலய வளாகத்தில் கடைகள் திறக்கும் திட்டங்கள் மற்றும் காவடிகள் குறித்து ஊடகங்கள் வாயிலாக அறிவிப்புகள் அவ்வப்போது செய்யப்படும் என்று இரா. சுப்பிரமணியம் அறிவித்தார்.

---

# சரவாக் துணை முதல்வர்களாக மூவர் நியமனம்




கூச்சிங், டிச. 31-

சரவாக் மாநிலத்தின் துணை முதல்வர்களாக மூவர் நியமனம் செய்யப்பட்டுள்ளனர். இந்தப் பதவி நியமனத்தை அம்மாநில முதல்வர் டான்ஸ்ரீ அபாங் ஜொஹாரி அபாங் ஓப்பெங் அறிவித்தார்.

முன்னதாக அந்தப் பதவியை வகித்து வந்த டத்தோ அமார் டக்ளஸ் உங்கா, டத்தோ அமார் அபாங் தெங்கா அலி ஆகிய இருவரும் நீட்டிக்கப்படுகின்ற நிலையில் எஸ்யுபிபி கட்சியின் தலைவர் டத்தோஸ்ரீ டாக்டர் சிம் குய் தியானுக்கு மீண்டும் துணை முதல்வர் பதவி வழங்கப்பட்டுள்ளது.

இதற்கு முன்னதாக அவர் கடந்த 2006ஆம் ஆண்டு முதல் 2011ஆம் ஆண்டு வரை துணை முதல்வர் பதவியை வகித்து வந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

இந்நிலையில் 12ஆவது மாநில சட்டமன்றத் தேர்தலுக்குப் பிறகு சரவாக் மாநிலத்தின் புதிய அமைச்சரவையில் 15 அமைச்சுகளுக்கு 10 அமைச்சர்கள் பொறுப்பேற்கின்றனர்.

மேலும் நிதி, பொருளாதார அமைச்சு, கனிம வள, நகர்ப்புற மேம்பாட்டு அமைச்சு, எரிபொருள், சுற்றுச்சூழல் பாதுகாப்பு அமைச்சின் பதவிகளை அபாங் ஜொஹாரி ஏற்றுக் கொண்டுள்ளார்.

---



# சுங்கைபட்டாணி தைப்பூசத்தில் போலீஸ் தீவிரப் பாதுகாப்பு

***குற்றப்புலனாய்வுத்துறைத் தலைவர் டத்தோ சுரேஸ்குமார் உறுதி***

● **கு. அன்பரசன்**

சுங்கைபட்டாணி, டிச. 31-

இம்முறை தைப்பூச விழாவிற்கு கெடா மாநிலப் போலீசார் தீவிரப் பாதுகாப்பினை வழங்குவார்கள் என கெடா மாநிலக் குற்றப்புல னாய்வுத்துறை உயர் அதிகாரி டத்தோ சுரேஸ்குமார் ஜி. சுப்பையா சுங்கைபட்டாணி ஸ்ரீ சுப்பிரமணிய சுவாமி தேவஸ் தானத்திடம் உறுதி அளித்தார்.

இம்முறை கொண்டாடப்படும் தைப்பூச விழா ஒரு புதிய பரிமாணத்தில், நடமாடும் கட்டுப்பாட்டு ஆணையினைப் பின்பற்றி நடைபெறவிருக்கிறது. அனைவரும் அதற்கு மதிப்பளித்து இந்த விழா நல்ல முறையில் பாதுகாப்புடன் கொண்டாடப்பட வேண்டும் என்றார். நேற்று சுங்கைபட் டாணி ஸ்ரீ சுப்பிரமணிய சுவாமி தேவஸ்தானத்திற்கு வருகை யளித்த அவர் பக்தர்களுக்கு எந்தவித இடைஞ்சல்களும் இல்லாமல் அவர்களது நேர்த்திக்கடனை விரைவில் செலுத்துவதற்கு தேவஸ்தானத் திற்கு தனது ஆலோசனைகளை யும் அவர் வழங்கினார்.

நமது சமயம் சார்ந்த திருவிழாவான தைப்பூச விழாவை பக்தர்கள் சிறந்த முறையில் கொண்டாட வேண்டும் எனவும் அதற்காக தமது சிறப்பு போலீஸ் படைகளை தீவிரக் கண்காணிப்பில் வைக்கவிருப்பதாக தேவஸ்தானத் தலைவர் பெ.இராஜேந்திரனிடம் அவர் குறிப்பிட்டார்.

இதனிடையே தைப்பூச விழா தொடக்ககால முதல் கோலமூடா மாவட்ட போலீசார் தங்களது நடவடிக்கைகளை மேற்கொள்ளவிருப்பதாக கோலமூடா மாவட்ட சிறப்புப் படையினைச் சேர்ந்த ஏஎஸ்பி காந்தன் செல்வராஜூ தெரிவித்தார்.